[1990 மே 8

கொல்லிமலைப் பகுதியில் புதிய தொழில்கள்.

*5814 திரு. எஸ். என். எம். உபயதுல்லா :
மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கொல்லிமலைப் பகுதியில் கிடைக்கும் பாக்ஸைட்டைக் கொண்டு புதிய தொழில்கள் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 6803 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

சூரியகாந்தியிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை.

* 6364 திரு. சு. குருநாதன் :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நெல்லை கட்டபொம்மன் மாவட்டம், தென்காசியில் சூரியகாந்தியிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. சு. குருநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் அதிலும் குறிப்பாக தென்காசியைச் சுற்றியிருக்கின்ற வட்டாரத்தில் சூரியகாந்தி அதிகமாக விவசாயிகள் பயிரிட்டு இருக்கின்ற காரணத்தால், அதிலிருந்து எண்ணெய் எடுக்கின்ற திட்டத்தை இந்த அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற செயற்குறிப்பு தற்போது இல்லை.